தினமணி

"மிளகாய் வற்றலை சேமித்து வைத்து விற்பனை செய்யலாம்'

First Published : 01 May 2011 01:08:39 PM IST

திண்டுக்கல், ஏப். 29: மே மாதத்திலிருந்து மிளகாய் வற்றலுக்கு விலை அதிகம் கிடைக்க வாய்ப்புள்ளதால், தற்போது அறுவடை செய்துவரும் மிளகாய் வற்றலை சேமித்து வைத்து, மே மற்றும் ஜூன் மாதங்களில் விற்று லாபம் பெறலாம் என திண்டுக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் கு.ரா. சாரநாத்பாபு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மிளகாய் இலங்கை, வங்கதேசம், மலேசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இவை மிளகாய் வற்றல், மிளகாய் விதைகள், எண்ணெய் பசை, மிளகாய்ப் பொடி, மிளகாய் ஊறுகாய் ஆகிய பொருள்களாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அமெரிக்கா மிளகாய் பசை, மிளகாய் எண்ணெய் ஆகிய இரண்டு பொருள்களையும் அதிகளவில் இறக்குமதி செய்கிறது.

தமிழகத்தில் ஆகஸ்டு மாதம் முதல் பிப்ரவரி வரை மிளகாய் பயிரிடப்படுகிறது.

விருதுநகர் சம்பா (சன்னம்), ராமநாதபுரம் முண்டு (குண்டு) ஆகிய ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

மிளகாய் அறுவடை தமிழகத்தில் தற்போது துவங்கி உள்ளது.

விருதுநகர், பரமக்குடி, ராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மிளகாய் வற்றலுக்கு முக்கியச் சந்தைகளாக உள்ளது.

மிளகாய் காய்பிடிக்கும் பருவத்தில் பெய்த மழையின் காரணமாகவும், வேலை ஆள்கள் பற்றாக்குறையால், மிளகாய் சாகுபடி குறைந்த காரணத்தினாலும் நடப்பு ஆண்டில் விளைச்சல் குறைவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக கடந்த ஆகஸ்டு மாதத்தில் குவிண்டாலுக்கு ரூ.5,250 என்பதில் இருந்து விலை உயர்ந்து வருகிறது.

நடப்பு மாத்திற்கான முன்பேர வர்த்தக விலை குவிண்டாலுக்கு ரூ.8,514 என உள்ளது.

கடந்த ஆண்டு ஒருநாள் வரத்து 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் மூடைகள் என்ற அளவில் இருந்தது.

இந்நிலையில், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் இயங்கிவரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து மிளகாய் வற்றலுக்கான விலையினை முன்னறிவிப்பு செய்துள்ளது.

இதன்படி ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஒரு கிலோ மிளகாய் வற்றலின் விலை ரூ.77 முதல் ரூ.91 வரை நிலவும் என முன்னறிவிப்பு செய்துள்ளது. மே மாதத்தில் இருந்து அதிக விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே விவசாயிகள் தற்போது அறுவடையாகும் வற்றலை சேமித்து வைத்து மே மற்றும் ஜூன் மாதங்களில் விற்று லாபம் பெறலாம். குளிர்பதன் கிடங்குகளில் மிளகாய் வற்றலை சேமிக்க மாதத்திற்கு ஒரு கிலோவுக்கு 40 பைசா செலவாகும்.

சாதாரண கிட்டங்கிகளில் சேமிக்க மாதத்திற்கு இதை சேமிக்க ஒரு கிலோவுக்கு15 பைசா மட்டுமே செலவாகும்.

எனவே மிளகாய் வற்றலை சேமித்து வைத்து லாபத்துடன் விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டும் என வேளாண் துணை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**திராட்சை பதப்படுத்தும் நிலையம்**

First Published : 01 May 2011 01:08:17 PM IST

திண்டுக்கல், ஏப். 29: திண்டுக்கல் மாவட்டத்தில் திராட்சை நன்கு விளைந்து வருகிறது. இதற்குத் தேவையான பதப்படுத்தும் நிலையம் அமைத்திட வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வாழக்காபட்டி, கண்ணாபட்டி, கல்லுபட்டி, நரசிங்கபுரம், ஏ.வெள்ளோடு, செட்டியபட்டி, சாமியார்பட்டி, ஜாதிக்கவுண்டன்பட்டி, பெருமாள்கோவில்பட்டி, காமலாபுரம் ஆகிய இடங்களில் அதிகளவில் கறுப்பு திராட்சை பல ஆண்டுகளாகவே பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால், இதனைப் பதப்படுத்தும் நிலையம் இல்லாததால், உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

இதுகுறித்து, ஏ.வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி செல்வராஜ் கூறியது:

எனது தோட்டத்தில் ஒரு ஏக்கர் 10 சென்ட் அளவு திராட்சை பயிரிட்டுள்ளேன்.

கடந்த ஆண்டு திராட்சை ஒரு கிலோ ரூ.18-க்கு விற்பனை ஆனது. நடப்பாண்டில், ஒரு கிலோ ரூ.15-க்குத் தான் விலை போகிறது.

விளைச்சல் நன்றாக இருந்தாலும், போதிய விலை கிடைப்பதில்லை. இது ஒரு வகையில் விவசாயிக்கு நஷ்டத்தை கொடுத்து வந்தாலும், கூலி வேலைக்கு ஆள்கள் கிடைப்பதிலும் சிக்கல் இருந்து வருகிறது. பெண் கூலி ஆள்களுக்கு ரூ. 200, ஆண் கூலி ஆள்களுக்கு ரூ.300 கொடுத்தால்தான் வேலைக்கு ஆள் கிடைக்கிற நிலை இருந்து வருகிறது.

நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டம் வந்ததற்குப் பின்னர் தான் இந்த நிலை. இத் திட்டம் பொது மக்களுக்கு பயனளிப்பதாக இருந்தாலும் பாதிக்கப்படுவது விவசாயம் தான்.

இதையும் மீறி, திராட்சையை பயிரிடும்போது இது ஆண்டுக்கு இருமுறை விளைகிறது. இருந்தபோதிலும், உரிய பதப்படுத்தும் நிலையம் இல்லாததால் தகுந்த லாபம் கிடைப்பதில்லை. அரசு இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டால் திராட்சை பயிரிடும் விவசாயிகள் லாபமடைவர் என்றார்.

**மழை: உப்பு உற்பத்தி பாதிப்பு**

First Published : 01 May 2011 01:05:18 PM IST

கீழக்கரை,ஏப். 29: கீழக்கரை அருகே உள்ள உப்பளங்களில் கோடை மழை காரணமாக உப்பு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பருவமழை முன்கூட்டியே ஆரம்பித்ததால், எதிர்பார்த்த அளவில் உப்பு உற்பத்தியாகவில்லை. இதனால் உப்பு தட்டுப்பாடு நிலவியது. எனவே உப்பு உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனிடையே, கடந்த சில நாள்களாக பெய்த கோடைமழையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

**வனப் பகுதியில் மழை: ஆறுகளில் நீர்வரத்து அதிகரிப்பு**

First Published : 01 May 2011 01:15:28 PM IST

ராஜபாளையம், ஏப். 29: ராஜபாளையத்துக்கு மேற்கே வனப் பகுதியில் பெய்துவரும் கோடை மழையால் ஆறுகளில் தண்ணீர் வரத் துவங்கியுள்ளதால், விடுமுறையில் குளிக்கவரும் சுற்றுலாப் பயணிகள் பள்ளி மாணவர்கள் வருகை அதிகரித்துள்ளது.

ராஜபாளையம் தேவதானத்துக்கு மேற்கேயுள்ள கேரள பெரியார் புலிகள் சரணாலய வனப் பகுதியில் ஏப்ரல் 10 முதல் கோடை மழை பரவலாகப் பெய்து வருகிறது. இதனால், தமிழக வனப் பகுதியிலும் மழை பெய்து வருவதால், ராஜபாளையம் முடங்கியாறு, தேவதானம் சாஸ்தா கோவில் நகரியாற்றில் தண்ணீர் வரத் துவங்கியுள்ளது.

வனப் பகுதியிலும், மலையடிவாரப் பகுதியிலும் குளிர்ந்த காலநிலை நிலவி வருகிறது. இதனால் ஆற்றில் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் குளிக்க வருகின்றனர்.

தற்போது கோடை விடுமுறை என்பதால், பள்ளி மாணவர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. வனத் துறையினர் தீவிரப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வனப் பகுதியில் இரவு நேரங்களில் பெய்யும் மழையால் ராஜபாளையம் ஆறாவது மைல் குடிநீர்த்தேக்கத்துக்கு தண்ணீர் தொடர்ந்து வருவதால், நீர்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.

**"உணவுப் பொருளுக்கு அக்மார்க் தரச்சான்று பெற வேண்டும்'**

First Published : 01 May 2011 01:25:07 PM IST

கரூர், ஏப். 30: உற்பத்தியாளர்கள் உணவுப் பொருள்களுக்கு அக்மார்க் தரச்சான்று பெற வேண்டும் என மாநில அக்மார்க் ஆய்வக வேளாண்மை அலுவலர் டேவிட் ராஜசேகர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தொழில்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான பொருள்களுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை வழங்கப்படுகிறது. இதேபோல, கலப்படமற்ற தரமான உணவுப் பொருள்களுக்கு அக்மார்க் தரச்சான்று முத்திரை வழங்கப்படுகிறது. லாபம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்ட ஒரு சிலரால் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுகிறது.

இதிலிருந்து தரமான உணவுப் பொருள்களை வேறுபடுத்திக் காட்ட ஒவ்வொரு உணவுப் பொருள்கள் தயாரிப்பாளரும் தாங்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு அக்மார்க் தரச்சான்று பெற்று பயனடையலாம். அக்மார்க் தரச்சான்று மசாலா பொடிகள், தேன், எண்ணெய் வகைகள், மாவு பொருள்கள், பருப்பு வகைகள் நெய் போன்ற 140-க்கும் மேற்பட்ட உணவு மற்றும் கால்நடை உணவுப் பொருள்களுக்கு வழங்கப்படுகிறது.

அக்மார்க் தரச்சான்று முத்திரை பெற விரும்பும் சிறிய, பெரிய உணவுப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் அக்மார்க் ஆய்வக வேளாண்மை அலுவலரை தொடர்புகொள்ளலாம்.

கரூர் மாவட்டத்திலுள்ள உணவுப் பொருள் தயாரிப்பாளர்கள் கரூர் திருமாநிலையூரிலுள்ள வேளாண்மை அலுவலரை தொடர்புகொள்ளலாம் என்றார் அவர்.

**மழையால் பாதித்த பயிர்களை காப்பாற்றுவது எப்படி?**

First Published : 01 May 2011 03:23:16 PM IST

விழுப்புரம், ஏப். 30: மழையால் பாதித்த வெள்ளரி, பீர்க்கன், மிளகாய் பயிர்களை காப்பாற்ற தோட்டக்கலை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் விளக்கம் அளித்துள்ளார்.

÷இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் பெய்த மழையால் கோலியனூர் ஒன்றியத்துக்குட்பட்ட பாணாம்பட்டு, அய்யன்குளம் காலனி, நன்னாட்டாம்பாளையம், சாலைஅகரம், ராகவன்பேட்டை ஆகிய கிராமங்களில் 80 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்திருந்த வெள்ளரி பயிரும், பிடாகம் கிராமத்தில் சாகுபடி செய்திருந்த பீர்க்கன், மிளகாய் போன்ற பயிர்களின் பழங்களும், காய்களும், கொடிகளும் பாதிப்படைந்துள்ளதாக தெரிகிறது.

÷இது தொடர்பாக வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் பாதிப்படைந்த வயல்களை நேரில் ஆய்வு செய்த பின்னர் சில பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளது.÷வெள்ளரி பயிரில் தோன்றியுள்ள பழஅழுகல் நோய் பொதுவாக கோடையில் பெறும் மழையின்போது ஈரப்பதம் அதிகரிப்பதாலும், வெப்பநிலை அதிகமாக உள்ள நிலையிலும் இந்த நோயின் தாக்குதல் பரவலாக தென்படும்.

÷இதற்கு முதிர்ந்த வெள்ளரி காய்களுக்கு கீழாக வைக்கோல் சுருளைகளை வைத்து பராமரிப்பதால், பழங்கள் மண்ணில் தொடுவதை தவிர்த்து நோயின் தாக்குதலை தவிர்க்கலாம்.

÷மழையால் பாதித்த செடிகள் மற்றும் பழங்களைப் பாதுகாக்க போர்டோ பேஸ்ட் 2-லிருந்து 3 கிராம் அல்லது காப்பர் ஹைடிராக்ஃஸடு 2.5 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் நீருடன் கலந்து, பின்னர் இதனுடன், மான்கோசெப் மருந்து 2 கிராம், ஒரு லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து மழைக்கு பிந்தைய நிலையில் பயிர் பாதுகாப்பு செய்வதன் மூலம் வெள்ளரிச் செடிகளில் தோன்றும் அழுகல் மற்றும் இலைப்புள்ளி நோயிலிருந்து செடிகளை பாதுகாக்கலாம்.

÷பிடாகம் கிராமத்தில் சாகுபடி செய்துள்ள பீர்க்கன் மற்றும் மிளகாய் பயிரில் தோன்றியுள்ள காய் அழுகல் நோயை கட்டுப்படுத்த காப்பர் ஹைடிராக்ஃஸடு 2.5 கிராம், ஒரு லிட்டர் தண்ணீருடன் சேர்த்து மான்கோசெப் மருந்து 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் வீதமும் கலந்து பொதுவாக மழைக்கு பிந்தைய நிலையில் தெளிப்பு செய்வதால் மழையின் சேதத்திலிருந்து பயிர்களை காப்பாற்றலாம்.

÷மேலும் தோட்டக்கலைத் துறையின் அலுவலர்களை கலந்தாலோசித்து மழையின் சேதத்திலிருந்து பிற தோட்டக்கலைப் பயிர்களையும் காப்பது எவ்வாறு என்பது குறித்தும் தேவை அடிப்படையில் பரிந்துரைகளை பெற்று விவசாயிகள் பயன்பெறலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**உரம் விநியோகம் கண்காணிக்க வேளாண் துறை குழு அமைப்பு**

பதிவு செய்த நாள் : மே 02,2011,01:19 IST

கரூர்: "உரம் விநியோகத்தை மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது' என, கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெகதீசன் அறவித்துள்ளார். அறிக்கையில் உள்ளதாவது: குறு வை மற்றும் சம்பா சாகுபடிக்கு தேவையான ரசாயன உரம் மற்றும் விதைகள் விவசாயிகளுக்கு தடையில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உர ம் விநியோகத்தை மாவட்ட மற்றும் வட்டார அளவில்கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து விவசாயிகளும் தங்களுக்கு தேவையான ரசாயன உரங்களை அருகிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். உர விநியோகம் மற்றும் உரம் கிடைப்பதில் ஏதேனும் இடர்பாடு இருந்தால், அதன் விபரத்தை மாவட்ட அல்லது வட்டார கண்காணிப்புமையத்துக்கு தகவல் தெரிவிக்கலாம். மாவட்ட கண்காணிப்பு குழு (வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகம், கரூர்) வேள ாண்மை உதவி இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுப்பாடு) 04324 - 252792. வட்டார அளவிலான கண்காணிப்பு குழு: வட்டார வேள ாண்மை உதவி இயக்குனர்கள்: கரூர் 04324 - 220299.

தாந்தோணி 04324 - 255225, அரவக்குறிச்சி 04320 - 231299. க.பரமத்தி 04320 - 283299. குளித்தலை 04323 - 222101. தோகமலை 04323 - 252802, கடவூர் 04323 - 251252. கிருஷ்ணராயபுரம் 04323 - 243342. விவசாயிகள் தங்கள் சாகுபடிக்கு டி.ஏ.பி. உரத்தை மட்டும் பயன்படுத்தாமல் மாற்று உரங்களான 20:20:0, 16:20:0 ஆகிய காம்ப்ளக்ஸ் உரங்களையும் பய ன்படுத்தலாம். அனைத்து உரங்களும் போதிய அளவில் அனைத்து தொடக்க வேள ாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. உர மூட்டை மீது அச்சடிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை பார்த்து உரம் வாங்க வேண்டும்.

**விளை நிலங்களில் ஊடுருவும் காட்டுபன்றிகளால் விவசாயிகள் பீதி**

பதிவு செய்த நாள் : மே 02,2011,00:43 IST

தர்மபுரி: தர்மபுரி அடுத்த நல்லம்பள்ளி, ஜருகு பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் இரவு நேரத்தில் புகுந்து விளைபொருட்களை நாசம் செய்யும் காட்டுபன்றிகளால் விவசாயிகள் பீதியடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் வெயில் தாக்கம் அதிகரித்துவருவதால், நீர் நிலைகள் வறட்சி ஏற்பட்டு வனப்பகுதிகளில் விலங்குகளுக்கான தீவனங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், நல்லம்பள்ளி, பாளையம்புதூர், தொப்பூர் மற்றும் ஜருகு பகுதியிலுள்ள வனப்பகுதியிலிருந்து காட்டுபன்றிகள் கடந்த ஒரு வாரமாக விளைநிலங்களில் புகுந்து விளைபொருட்களை நாசம் செய்துவருகிறது.

மேலும், பென்னாகரம், ஒகேனக்கல் ஆகிய பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக யானைகள் கூட்டம், கூட்டமாக காவிரி ஆற்றுப்படுகையை நோக்கி இடம் பெயர துவங்கியுள்ளது. அதே போல் தொப்பையாறு, அரூர் வனப்பகுதியிலும் கடும் தீவன தட்டுப்பாடு, குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நல்லம்பள்ளி, பாளையம்புதூர் பகுதிகளில் கேழ்வரகு, சோளம், மக்காச்சோளம் மற்றும் நிலக்கடலை பயிர்கள் அதிகமாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொப்பூர் வனப்பகுதியில் காட்டு பன்றிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளது. தற்போது வறட்சி ஏற்பட்டுள்ளதால், வனப்பகுதியையொட்டிய விளைநிலங்களில் இரவு நேரத்தில் புகுந்து பயிர்களை நாசம் செய்கிறது.

இதனால், நல்லம்பள்ளி, தொப்பூர் பகுதிகளில் இரவு நேரத்தில் விவசாயிகள் கண்விழித்து, வேளாண் பொருட்களை பாதுகாத்துவருகின்றவனர். மேலும் கூட்டமாக காட்டு பன்றிகள் வருவதால், வனப்பகுதியையொட்டியுள்ள விவசாய நிலங்களில் பரணை அமைத்து விவசாயிகள் பாதுகாத்துவருகின்றனர். மேலும், இரவு நேரங்களில் தீப்பந்தங்கள் ஏந்தியும், பயங்கர சத்தம் எழுப்பியும் காட்டு பன்றிகள் விவசாய நிலங்களுக்குள் புகுவதை தடுத்து வருகின்றனர்.

தொடர்ந்து, காட்டுபன்றிகளின் தாக்கம் அதிகமாகவுள்ளதாகவும், வேளாண்பொருட்களை பாதுகாக்கவும், விளைநிலத்தில் புகுவதை தடுக்க குறைந்த அழுத்த மின்கம்பிகள் அமைக்க வனத்துறை அனுமதிக்க வேண்டும். அல்லது வனத்துறையினரே சோலார் கம்பி வேலிகள் அமைத்து தங்களின் வனவிலங்குகள் புகுவதை தடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நெல் கொள்முதல் மையம் அமைக்க கோரி ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : மே 02,2011,00:51 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு நெல் கொள்முதல் மையம் அமைத்து, நெல் கொள்முதல் செய்யக்கோரி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் காவேரிப்பட்டணத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் அரசு நெல் கொள்முதல் மையம் அமைத்து ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு நெல் கொள்முதல் மையம் இல்லாததால், வியாபாரிகளிடம் ஒரு கிலோ 5 ரூபாய்க்கு நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

அதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உடனடியாக அரசு நெல் கொள்முதல் மையம் அமைத்து நெல் கொள்முதல் செய்ய வேண்டும்' என்பதை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் காவேரிப்பட்டணத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சிவசாமி தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர் கோரிக்கை குறித்து பேசினார். மாவட்ட நிர்வாகிகள் சுந்தரேசன், வேலு, வண்ணப்பா, தேவேந்திரன் பெருமாள், கிருஷ்ணன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கம்பு சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : மே 02,2011,00:45 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்துவருவதால், விவசாயிகள் குறைந்த நாட்களில் அதிக லாபம் பெற கம்பு சாகுபடி செய்யுமாறு வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது. மாவட்ட வேளாண் துறை விடுத்துள்ள அறிக்கை: விவசாயத்தை பிரதானமாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்ய தொடங்கியுள்ளது. இந்த சூழ்நிலையில் குறைந்த நீரை கொண்டு குறைந்த வயதில் அதாவது 80 லிருந்து 85 நாட்களில் மகசூல் தரக்கூடிய கம்பு பயிரை விவசாயிகள் சாகுபடி செய்யலாம்.

கம்பினை மானாவாரி பயிராகவும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பெய்யக்கூடிய மழையை கொண்டு இறவை பட்டத்திலும் சாகுபடி செய்யலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறிப்பாக கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை மற்றும் மத்தூர் ஆகிய சுற்று வட்டார பகுதிகளில் பரவலாக இறவை கம்பு சாகுபடி செய்யப்படுகிறது. கம்பானது புல்குடும்பத்தை சேர்ந்த ஆப்பிரிக்கா

நாட்டை தாயகமாக கொண்டது. கம்பானது 150 செ.மீ., முதல் 180 செ.மீ., வரை உயரம் வளரக்கூடியதாகும்.

கிளைக்கும் தன்மை கொண்டதுமான கம்பு பயிர் மிகவும் வறட்சியான பகுதிகளிலும், சத்துக்குறைவான மண்பாங்கான நிலங்களிலும், சத்து அதிகம் உள்ள வண்டல் மண் நிலங்களிலும் பயிர் செய்யலாம். கம்பு பயிர் சாகுபடியில் முக்கிய தொழில் நுட்பங்களை கடிப்பிடித்தால் இறவை கம்பு சாகுபடியில் ஏக்கருக்கு ஆயிரத்து 200 கிலோவும், மானாவாரி கம்பில் ஏக்கருக்கு 800 கிலோவும் மகசூல் பெறலாம். ஒரு கிலோ கம்பு 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டாலும் இறவை கம்பு சாகுபடியில் ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாயும், மானாவாரி கம்பு சாகுபடியில் 8 ஆயிரம் ரூபாயும் லாபம் பெறலாம்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஐசிஎம்வி221, ஐசிஎம்எஸ்7703 மற்றும் கோ7 ரக கம்புகளை சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு 2 கிலோ விதைக்கு தலா ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம், மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போபாக்டீயா நுண்ணுயிர் கலவையை 200 மி.லி., ஆரிய அரிசி கஞ்சியுடன் கலந்து 30 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கர் கம்பு நடவு செய்ய மூன்று சென்ட் பரப்பு நாற்றங்கால் தேவை, 300 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் 9 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தினை கலந்து கடைசி உழவுக்கு முன்பாக சீராக இடவேண்டும்.இதனைதொடர்ந்து மேட்டுப்பாத்திகள் அமைத்து விதைகளை விதைக்க வேண்டும்.

ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரத்துடன் தழை, மணி,சாம்பல் சத்துதரவல்ல யூரியா மற்றும் பாஸ்பேட் மற்றும் முயூரேட் ஆப் பொட்டாசினை கலந்து கடைசி உழவுக்கு முன் உழவு செய்து நன்கு கலக்க வேண்டும். 16 நாள் வயதுடைய நாற்றுகளை ஒரு குத்துக்கு 2 வீதம் வயலில் நடவு செய்ய வேண்டும். நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்ட சத்தினை நட்டவுடன் போதுமான அளவு மணலுடன் கலந்து மேலாக இடவேண்டும்.

மேலும் தலா 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் கலவையை தொழு உரத்துடன் கலந்து நடவு வயலில் இட வேண்டும். கம்பு பயிரில் தூர் கட்டும் பருவத்தில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து தரவல்ல 31 கிலோ யூரியாவினை இட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இந்த தொழில் நுட்பங்களை கம்பு சாகுபடியில் விவசாயிகள் கையாண்டு குறைந்தநாட்களில் குறைந்த நீரை கொண்டு இறவை கம்பு சாகுபடி செய்து பயன் பெறலாம். இது குறித்து மேலும் விபரங்கள் அறிய அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகலாம்.

**உழவர்சந்தைகளில் மீன்விற்பனை முடக்கம்**

பதிவு செய்த நாள் : மே 01,2011,21:28 IST

தேனி:உழவர்சந்தைகளில் மீன் விற்பனை செய்யும் திட்டம் முடங்கி உள்ளது. மாவட்டத்தில் நீர்வள, நிலவள மேம்பாட்டு திட்டத்தில் கண்மாய், குளங்களில் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு நூறு சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இங்கு வளர்க்கப்படும் மீன்களை விவசாயிகள் உழவர்சந்தைகளில் கொண்டு வந்து விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக உழவர்சந்தைகளில் மீன்கடைகள் தனியாக திறக்கப்படும். விவசாயிகள் தவிர மற்றவர்கள் மீன்விற்க அனுமதியில்லை. முதற்கட்டமாக தேனி, கம்பம் உழவர்சந்தைகளில் மீன்கள் விற்கப்படும் என அறிவிக்கப்பட்டது. திட்டம் அறிவிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகியும் நடைமுறைக்கு வரவில்லை.தற்போது வெளி வியாபாரிகள், உழவர்சந்தை முன் மீன்களை அதிக விலைக்கு விற்கின்றனர்.பொது மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மீன்கள் கிடைக்க, உழவர்சந்தைகளில் விவசாயிகள் மூலம் மீன் விற்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

**தழைச்சத்து அளிக்கும் தக்கைபூண்டு:வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : மே 01,2011,00:35 IST

திருநெல்வேலி:தக்கைபூண்டு பயிரிட்டு தழைச்சத்தை சேமித்து அதிக விளைச்சல் பெற சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:சேரன்மகாதேவி வட்டாரத்தில் தற்போதைய பிசான நெற்பயிர் அறுவடைக்கு பின்னர் கோடை நெற்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் கவனத்திற்கு, நெல் பயிரிடுவதற்கு முன்பாக பசுந்தாளுர பயிரான தக்கைபூண்டை தங்கள் நிலத்தில் பயிரிட்டு 35-45 நாளில் அதனை நிலத்திலே மடக்கி உழுவதன் மூலம் நிலத்தில் தழைச்சத்து நிலை நிறுத்தப்படுகிறது. இதனால் தழைச்சத்து சுமார் 25 சதவீதம் சேமிக்கப்படுகிறது. மண்ணில் பொல பொலப்பு தன்மை அதிகமாகி நீர் பிடிப்பு தன்மையையும் அதிகமாக்குகிறது.

தென்னை சாகுபடி தோப்பிலும் தக்கைபூண்டு விதைப்பு செய்து பின்னர் மடக்கி உழுவதன் மூலம் அதிக விளைச்சல் பெறலாம். தக்கைபூண்டு விதைகளை குறிப்பாக களர், உவர் பாதித்த நிலங்களில் தொடர்ந்து முறையாக பயன்படுத்தினால் மண் பாதிப்பு நீங்கி எல்லாவிதமான பயிர்களும் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை தேவை.போதுமான அளவு தக்கைப்பூண்டு விதைகள் சேரன்மகாதேவி மற்றும் வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனை என்ஏடிபி

திட்டத்தின் கீழ் மானிய விலையில் விவசாயிகள் பெற்று பயன் பெறுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கரூரில் மல்லிகை பூ விலை 10 மடங்கு அதிகரிப்பு**

மே 01,2011,14:42



கரூர் : கரூரில் மல்லிகைப்பூ விலை 10 மடங்கு அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடையே பெரும் மகிழ்ச்சி காணப்படுகிறது. கடந்த 2 நாட்களாக ரூ.20 க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ மல்லிகை பூவின் விலை இன்று 10 மடங்கு அதிகரித்து ரூ.200 ஐ தாண்டி உள்ளது. கரூர் பூ மார்க்கெட்டில் (ஒரு கிலோ)முல்லைப் பூ ரூ.150க்கும், சம்மங்கி ரூ.80 க்கும், அரளிப் பூ ரூ.100க்கும், கோழிக்கொண்டைப் பூ ரூ.100 க்கும் விற்பனையாகிறது. தொடர் மழை காரணமாக பூ வரத்து குறைந்துள்ளது. இதனால் பூக்களின் விலை அதிகரித்து உள்ளதாக விபாயாரிகள் தெரிவித்துள்ளனர்.

**முட்டைக் கோழி இறைச்சி விலை 'கிடுகிடு' உயர்வு**

மே 01,2011,01:40



நாமக்கல்:'தொடர் மழையால் கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்துள்ளது. அதனால், ஒரு கிலோ முட்டைக்கோழி இறைச்சி விலை 43 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் வாரங்களில் அதன் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது' என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியளவில் கோழிப்பண்ணைத் தொழிலில், நாமக்கல் சிறந்து விளங்கி வருகிறது. நாமக்கல் மண்டலத்தில் மட்டும், 800க்கும் அதிகமான சிறிய, பெரிய கோழிப்பண்ணைகள் இயங்கி வருகின்றன. அதன்மூலம், நாளொன்றுக்கு, 3 கோடி முட்டை உற்பத்தி செய்து, கேரளா மற்றும் வெளிநாடுகளுக்கு நாள்தோறும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.இதுதவிர, சத்துணவு திட்டம், மாநிலம் முழுவதும் உள்ளூர் விற்பனைக்கும், நாமக்கலில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

முட்டை உற்பத்தியில் ஈடுபடுத்தும் கோழிகள், குறிப்பிட்ட நாள்களுக்கு பின் இறைச்சிக்காக விற்பனை செய்யப் படுகின் றன. பெண் கோழிக்குஞ்சுகள், 18வது வாரம் முதல், முட்டை உற்பத்தியில் ஈடுபட ஆரம்பிக்கின்றன. தொடர்ந்து, 72 வாரம் வரை அவை முட்டையிடும். ஒரு கோழி ஆண்டுக்கு, 320 முட்டை வீதம் இடும். 72வது வாரத்துக்கு பின், முட்டையிடும் அளவு குறைகிறது.அதனால், அவை இறைச்சிக்கு அனுப்பப்படுகின்றன. குறிப்பாக, கேரள மாநிலத்துக்கு அதிகளவில் விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன.சில வாரங்களாக முட்டைக்கோழி விலை, கணிசமான அளவில் உயர்ந்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், 30 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ முட்டைக்கோழி இறைச்சி, அதன் பின் படிப்படி யாக ஏற்றம் கண்டது. ஏப்., 14ம் தேதி நிலவரப்படி, ஒரு கிலோ முட்டைக் கோழி இறைச்சி, 35 ரூபாயாக நிர்ண யிக்கப் பட்டது. 'தொடர்ந்து ஏற்றம் கண்டு வந்த ஒரு முட்டை கோழி இறைச்சி விலை, 43 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

தொடர் மழை, கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடை போன்றவற்றால், கோழி இறைச்சி உயர்ந்துள்ளது. ஒரு கிலோ கறிக்கோழி, 66 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோழி இறைச்சிக்கு தேவை உள்ளதால், வரும் வாரங்களில் அதன் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது' என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பருத்தி பயிரிடும் பரப்பளவு அதிகரிக்க வாய்ப்பு

மே 01,2011,01:39



புதுடில்லி:பருத்தி பயிரிடும் பரப்பளவு, வரும் பயிர் பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), 7 முதல் 10 சதவீதம் அளவிற்கு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது. பருத்தி விலை அதிகரித்து வருவதாலும், மத்திய அர", பருத்தியின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தும் என்ற எதிர்பார்ப்பு காரணமாகவும், விவசாயிகள் அதிக பரப்பில் பருத்தியை பயிர் செய்யத் தொடங்கியுள்ளனர்.நடப்பு பருவத்தில், 1.11 கோடி எக்டேர் பரப்பளவில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. இது, வரும் பருவத்தில், 1.20 கோடி எக்டேராக அதிகரிக்கும் என மதிப்பிட ப்பட்டுள்ளது.சென்ற 2009-10ம் ஆண்டுகளில், நல்ல விலை கிடைத்ததை அடுத்து, பருத்தி மிக அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டது.

பருத்தி மட்டுமின்றி, வட மாநிலங்களில், நெல் பயிரிடும் பரப்பளவும் அதிகரித்துள்ளது. மேற்கு மாநிலங்களில் மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் சோயாபீன் பயிரிடும் பரப்பளவும், தென்மாநிலங்களில் மிளகாய் மற்றும் புகையிலை பயிரிடும் பரப்பளவும் அதிகரித்து வருகிறது. நடப்பு 2010-11ம் பயிர் பருவத்தில்,நாட்டின் பருத்தி உற்பத்தி 3.29 கோடி பொதிகளாக (1 பொதி - 170 கிலோ) இருக்கும் என இந்திய பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பிட்டிருந்தது. இந்நிலையில், சென்ற டிசம்பர் மாதத்தில், பருவம் தவறிய மழையால், இது 3.12 கோடி பொதிகளாக குறையும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம், பருத்தி பயிரிடும் பரப்பளவு 1.03 கோடி எக்டேரிலிருந்து, 1.12 கோடி எக்டேராக அதிகரிக்கும் என வாரியம் மதிப்பீடு செய்துள்ளது.மத்திய அர", ஒரு குவிண்டால் பருத்திக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை 2,500 ரூபாயாக நிர்ணயித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள இந்த விலையை 2,800 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று வேளாண்மை செலவுகள் மற்றும் விலை நிர்ணயக் குழு பரிந்துரை செய்துள்ளது.உள்நாட்டு

சந்தையில், சென்ற மாதம் ஒரு கேண்டி(356 கிலோ) எஸ்-6 ரக பருத்தி விலை, 55,000 - 55,500 ரூபாய் என்ற அளவில் விற்பனையாகி வந்தது.

இது, சென்ற மார்ச் மாதத்தில், 58,000 - 61,000 ரூபாய் அளவிற்கு மிகவும் அதிகரித்து காணப்பட்டது.சென்ற ஏப்ரல் நிலவரப்படி, நடப்பு 2010-11ம் பருத்தி பருவத்தில், உலகளவில் பருத்தி பயிரிடும் பரப்பளவு 11 சதவீதம் அதிகரித்து 3.34 கோடி எக்டேராக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது, 2009 - 10ம் ஆண்டு 3 கோடி எக்டேர் என்ற அளவிற்கு இருந்தது.நடப்பு ஆண்டில், சர்வதேச அளவிலான பருத்தி விளைச்சல், ஒரு எக்டேருக்கு சராசரியாக 733 கிலோவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற 2009-10ம் ஆண்டில், பருத்தி உற்பத்தி எக்டேர் ஒன்றுக்கு, 726 கிலோ என்ற அளவில் இருந்தது.அதே நேரத்தில், நடப்பு பருவத்தில், உலகளவில் பருத்தி உற்பத்தி 14 சதவீதம் அதிகரித்து, 2.19 கோடி டன்னிலிருந்து, 2.45 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**படுத்தது பருப்பு: வாட்டுது வத்தல் கலக்குது கடலை எண்ணெய் விலை**
மே 01,2011,01:32



விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் குவிண்டால் உளுந்தம் பருப்பு 400 ரூபாயும், பாசிப் பருப்பு 500ம் குறைந்துள்ளது. கடலை எண்ணெய் விலை 15 கிலோ கொண்ட டின்னுக்கு 30 ரூபாயும், வத்தல் குவிண்டாலுக்கு 200 ரூபாய் உயர்ந்துள்ளது.விருதுநகரில் குவிண்டால் சர்க்கரை விலை 2,795 ரூபாயாக உள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,310 லிருந்து 1,340 ஆக உயர்ந்துள்ளது.

சூரியகாந்தி எண்ணெய் 1,170 ஆக உள்ளது. பாமாயில் 890லிருந்து 900 ரூபாயாக உயர்ந்துள்ளது. நிலக்கடலைப் பருப்பு 4,100 ரூபாயாக உள்ளது.

கடலைப்புண்ணாக்கு மூடை 2,800 ரூபாயாக உள்ளது. தாய்லாந்து, ஆஸ்திரியா, ஆஸ்திரேலியாவிற்கு நிலக்கடலை பருப்பு ஏற்றுமதியாவதால் இதன் விலை தொடர்ந்து உயரும் நிலை உள்ளது.உளுந்து விலை மூடைக்கு 4,900 ஆகவும், சுமார் ரகம் 4,100 லிருந்து 4,200 வரையும், பர்மா பருவட்டு 5,100 ரூபாயாகவுள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,800 லிருந்து 6,400 ஆக குறைந்துள்ளது. பர்மா பருவட்டு 6,200 ரூபாயாக உள்ளது. துவரை 4,400 லிருந்து 4,800 ஆகவும், பொடி துவரை 3,800 ஆகவும், துவரம் பருப்பு 6,000 லிருந்து 6,200 ரூபாயாக உள்ளது.பொடி துவரம் பருப்பு 5,200 ஆகவும், பாசிப்பயறு 6,400 ஆகவும், லயன் பருவட்டு 3,900 ஆகவும், சுமார் ரகம் 3,700 ரூபாயாகவும் உள்ளது.

பாசிப்பருப்பு 6,200 லிருந்து 5,700 ஆகவும், சுமார் ரகம் 5,600 லிருந்து 5,500 ரூபாயாக குறைந்துள்ளது. மைதா 2,180 ஆகவும்,ரவை 2,160 லிருந்து 2,150 ரூபாயாக குறைந்துள்ளது. கொண்டைக்கடலை 2,750 ஆகவும் பொரிகடலை 2,090 ரூபாயாக உள்ளது.மிளகாய் வத்தல்: புது வத்தல் 8,300லிருந்து 8,600 ஆக இருந்தது 8,800 ஆக உயர்ந்துள்ளது. முண்டு வத்தல் 7,800 லிருந்து 8,200 ரூபாயாக உள்ளது. சோடை வத்தல் 3,200 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,400 ரூபாயாகவும் உள்ளது.

**நெற்பயிரில் குருத்துப்பூச்சி தடுப்பு முறைகள்:வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : மே 01,2011,00:42 IST

திருநெல்வேலி:நெற்பயிரில் குருத்துப்பூச்சி தடுப்பு நிர்வாக முறைகள் குறித்து சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:தற்போது நிலவி வரும் பருவநிலை மாற்றங்கள் நெற்பயிரில் குருத்துப்பூச்சி பிரதான பூச்சியாக உருவெடுத்துள்ளது. குருத்துப் பூச்சியின் தாய் அத்துபூச்சி மஞ்சள் நிற இறக்கை மற்றும் அதில் இரண்டு கரும்புள்ளிகளுடன் காணப்படும். ஒரு பூச்சி 150 முதல் 200 முட்டைகளை இலையின் மேற்பரப்பில் அல்லது நுனியில் இட்டு பழுப்பு நிற ரோமங்களால் மூடி காணப்படும்.

நாற்றங்காலிலும், நடவு வயலிலும் குருத்துப் பூச்சி தாக்கிய செடியின் நடுக்குருத்து காய்ந்துவிடும். வளர்ந்த பயிரில் மணிகள் பிடிக்காமல் வெண்கதிர் உருவாகி மகசூல் இழப்பை ஏற்படுத்தும். நெற்பயிரில் பூச்சிகளை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறை சிறந்ததாகும். மேலும் நடவுக்கு முன் நாற்று முனைகளை கிள்ளி எடுத்துவிட்டு பின் நடவு செய்யலாம்.வேம்பு சார்ந்த மருந்து அசாடிரக்டின் ஒரு லிட்டர் நீரில் 2 மிலி கலந்து நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் தெளிக்கலாம்.

மேலும் கீழ்காணும் ரசாயண மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு மானோகுரோட்டோபாஸ் 2.5 மி.லி, புரபனோபாஸ் 2 மி.லி.அல்லது 0.4 மில்லி இன்டகலோகார்ப் அல்லது 2 கிராம் கார்டாப் ஹைடிரோகுளோரைடு மருந்துடன் ஒட்டும் திரவம் ( சான்டோவிட்) கலந்து தெளித்து கட்டுபடுத்தலாம்.மேற்கண்ட அறிகுறிகள் மூலம் பூச்சிகளை கண்டறிந்து பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றி அதிக மகசூல் பெற சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உயர் மகசூல் பெற மண் பரிசோதனை:வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : மே 01,2011,00:37 IST

திருநெல்வேலி:"சேரன்மகாதேவி வட்டாரத்தில் நெல் மற்றும் பயிறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் பெற்றிட மண் பரிசோதனை செய்யலாம்' என சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:பயிர் விளைச்சலை பெருக்க பல்வேறு தொழில் நுட்பங்களை பின்பற்றினாலும் அவற்றின் வெற்றி மண் வளத்தை பொறுத்ததாகும்.

மண் பரிசோதனை செய்வதால் மண்ணின் தன்மைக்கு ஏற்ற பயிர்களை தேர்வு செய்யலாம். மண்ணிலுள்ள சத்துக்களின் அளவு பற்றி தெரிந்து கொள்ளலாம். இதனால் அப்பயிருக்கு தேவையான அளவு மட்டும் உரம் இட்டு உர செலவை குறைத்திடலாம். மேலும் பயிருக்கு தீங்கு விளைவிக்கும் களர், உவர், அம்பலத்தன்மை போன்ற பிரச்னைகளை கண்டறிந்து நிலத்தை சீர்திருத்தம் செய்யலாம்.ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும், அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைப்பட்ட காலத்தில் மண் மாதிரி எடுக்க வேண்டும்.

ஒரு வயலுக்கு ஒரு மண் மாதிரி எடுக்கலாம். ஒரே நிலத்தில் மண்ணின் தன்மை மாறுபட்டால் தனித்தனியாக மாதிரி எடுக்கலாம். மண் மாதிரியானது வரப்பு, வாய்க்கால் அருகில், எரு குவித்த இடம் மற்றும் மர நிழலிலும் எடுக்கக் கூடாது.மண்வெட்டி மூலம் ஆங்கில எழுத்து "வி' போன்ற வடிவத்தில் பயிரினைப் பொறுத்து குறிப்பிட்ட ஆழத்தில் வெட்டி இருபக்க சரிவுகளிலும் 1 செ.மீ. செதுக்கி எடுக்க வேண்டும்.

நெல், சோளம் போன்ற தானிய பயிர்களுக்கு சுமார் 1/2 அடி ஆழத்திலும், ஆழமாக வேர்விடும் பருத்தி, கரும்பு, வாழை மற்றும் காய்கறி பயிர்களுக்கு சுமார் 3/4 அடி ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். மண்மாதிரி ஆய்வு செய்வதற்கு அரசு நிர்ணயித்த கட்டணம் மாதிரி ஒன்றுக்கு ரூ.10 செலுத்த வேண்டும்.இவ்வாறு மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்வதன் மூலம் மண் வளத்தை பெருக்கி அதிக மகசூலை பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**தக்காளி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 01,2011,01:11 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் மழையால் உற்பத்தி குறைவால் தக்காளி விலை மீண்டும் உயர்ந்து வருகிறது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழகத்தில் அதிகளவு தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. ஓசூர் அடுத்த ராயக்கோட்டையில் மிகபெரிய தக்காளி மண்டி சந்தை செயல்படுகிறது. தினசரி கூடும் இந்த சாலையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் தக்காளியை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.
வெளிமாநிலங்கள், தமிழகத்தின் பிற மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் ராயக்கோட்டை சந்தைக்கு வந்து விவசாயிகளிடம் நேரடியாக தக்காளி வாங்கி சென்று வருகின்றனர்.
மாவட்டத்தில் ஓசூர், ராயக்கோட்டை, பாகலூர், பேரிகை, உத்தனப்பள்ளி மற்றும் கெலமங்கலம் பகுதியில் தக்காளி சாகுபடி அதிகளவில் நடக்கிறது.
குறிப்பாக ஓசூர் பகுதியில் சொட்டு நீர் பாசன முறையில் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த சில மாதமாக மாவட்டத்தில் உற்பத்தி அதிகரிப்பாலும், வெளி மாநில தக்காளி வரத்து அதிகரிப்பாலும், தக்காளி விலை கிலோ 50 பைசா, ஒரு ரூபாய்க்கு வீழ்ச்சியடைந்தது. அதனால் விவசாயிகள் விளைநிலங்களில் தக்காளியை பறிக்காமல் விட்டனர். மார்க்கெட்டில் எதிர்பார்த்த விலை கிடைக்காததால் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த தக்காளியை ரோட்டில் வீசி சென்ற அவலம் ஏற்பட்டது.
மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த பரவலான மழையால் தக்காளி செடிகள் அழிந்தன. உழவர்சந்தை மற்றும் தினசரி மார்க்கெட், ராயக்கோட்டை தக்காளி மண்டி சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்தது. வரத்து குறைவால், கடந்த சில நாளாக தக்காளி விலை மீண்டும் உயர்ந்து வருகிறது. ராயக்கோட்டை தக்காளி சந்தையில், 18 கிலோ கொண்ட தக்காளி, 100 ரூபாய்க்கு விற்றது. உழவர் சந்தைகளில் ஒரு கிலோ தக்காளி, 4 முதல், 5 ரூபாய் வரை விற்பனையானது. மழையால் ஏற்பட்ட திடீர் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வாழையிலை விலை சரிவு**

பதிவு செய்த நாள் : மே 01,2011,01:58 IST

ஈரோடு: வாழையிலை கட்டு 250 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக விலை குறைந்துள்ளது.ஈரோடு மாவட்டம் லக்காபுரம், கொடுமுடி சுற்றுவட்டாரப் பகுதியில் இருந்து, ஈரோடு நேதாஜி பெரிய மார்க்கெட்டுக்கு வாழையிலை வருகிறது. ஈரோடு நகரில் மட்டும் 200க்கும் மேற்பட்ட

வாழையிலை வியாபாரிகள் உள்ளனர். பெரிய மார்க்கெட்டில் இருந்து இவர்கள் இலை வாங்கிச் சென்று விற்கின்றனர்.ஈரோடு சுற்றுவட்டாரப் பகுதியில் காற்றுடன் கூடிய மழை பெய்கிறது.இதன் காரணமாக தோட்டத்திலேயே வாழைக் கன்றுகளில் இலை உடைந்து விடுகிறது. கட்டில் பாதிக்கு பாதி வாழையிலை சேதமடைந்து விடுகிறது. இதனால், வாழையிலை வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.உற்பத்தி பாதித்த போதும், முகூர்த்தம் மற்றும் கோவில் திருவிழா சீஸன் இல்லாததால், வாழையிலை தேவை குறைந்துள்ளது. 300 வாழையிலை கொண்ட ஒரு கட்டின் விலை 250 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக குறைந்துள்ளது.

**கொப்பரைக்கு மார்க்கெட்டில் கிராக்கி விலை உயர்வதால் விவசாயிகள் குஷி**

பதிவு செய்த நாள் : மே 01,2011,00:09 IST

பொள்ளாச்சி : மார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி அதிகரித்து வருவதால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால், தென்னை விவசாயிகளும், கொப்பரை உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சியில் உள்ளனர். திருப்பூர் மாவட்டம் காங்கேயம் கொப்பரை மார்க்கெட்டில் கடந்த 23ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 63 ரூபாய் முதல் 64 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,440 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 106 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. விவசாயிகள் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர) டன்னுக்கு 17,500 ரூபாய் முதல் 18 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

பொள்ளாச்சி, உடுமலை தாலுகாவில் இருந்து சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு உணவு தேவைக்காக அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 16,500 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 10.50 முதல் 11.00 ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது. வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 9.50 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விலை கிடைத்தது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 65.50 ரூபாய் முதல் 66 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,460 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 106 ரூபாயும் விலை கிடைத்தது. விவசாயிகள சொந்த பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர) டன்னுக்கு 18,500 ரூபாய் முதல் 19 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் இருந்து சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு உணவு தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 17,000 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது.

விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 11.50 ரூபாய் முதல் 12 ரூபாய் வரை விலை கொடுக்கப்பட்டது. வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு அதிகபட்சமாக 10.50 விலை கொடுக்கப்
பட்டது. தேங்காய் சீசன் காலத்திலும் விலை சரிவு ஏற்படாமல் இருப்பதால் விவசாயிகளும், கொப்பரை உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: தேங்காய் வரத்து குறைவாக இருப்பதால் மார்க்கெட்டில் கிராக்கி அதிகரித்து வருகிறது. கடந்த 29ம் தேதி தனியார் எண்ணெய் நிறுவனங்கள் கொள்முதல் விலையை திடீரென உயர்த்தி உள்ளனர். முதல் தரமான ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 69 ரூபாய் விலை நிர்ணயம் செய்துள்ளனர். மேலும், கேரளாவில் ஒரு கிலோ கொப்பரைக்கு 68 ரூபாய் விலை கொடுக்கின்றனர். இதனால் காங்கேயம் மார்க்கெட்டில் கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்றனர்.

**"விவசாயத்தை மேம்படுத்த புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும்'**

பதிவு செய்த நாள் : மே 01,2011,21:41 IST

ஆனைமலை : ""விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும்," என கோவை இந்திய இயற்கை வழி வேளாண்மை சான்றிதழ் வழங்கும் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணமூர்த்தி கூறினார்.பொள்ளாச்சி அடுத்த மணக்கடவு வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனம் சார்பில் மூன்றாம் ஆண்டு விழா கல்லூரியில் நடந்தது. என்.ஐ.ஏ., கல்வி நிறுவனங்களின் செயலர் ராமசாமி வரவேற்றார். என்.ஐ.ஏ., கல்வி நிறுவனங்களின் தாளாளர் சங்கர் வாணவராயர் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சிவசாமி ஆண்டறிக்கை வாசித்தார்.
கோவை இந்திய இயற்கை வழி வேளாண்மை சான்றிதழ் வழங்கும் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது: இந்தியாவில், விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. அதை காப்பாற்ற இன்றைய இளம் தலைமுறையினர் பாடுபட வேண்டும். மண்ணை பற்றிய கண்ணோட்டத்தை அறிவியல் ரீதியாக தெரிந்து கொண்டு விவசாயம் செய்யவேண்டும். மற்ற துறைகளில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகளவில் உள்ளது. அதுபோல், விவசாயத்திலும் இளைஞர்களின் பங்களிப்பு அதிகளவில் இருக்க வேண்டும். மாணவர்கள் அனைவரும் பொறுமையும், சகிப்புத்தன்மையும் கடைபிடித்து வாழ்வில் நேர்மறை கருத்துக்களுடன் வாழவேண்டும். விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும். இதன்மூலம் சமுதாயத்தையும் உயர்த்த வேண்டும் என்றார். விழாவையொட்டி பல்வேறு போட்டிகள் நடந்தது. இதில், வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

வடக்கிபாளையம் காமதேனு உழவர் மன்ற தலைவர் ஜெயராமன், பேராசிரியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். கல்லூரி இயக்குநர் கெம்புசெட்டி நன்றி கூறினார்.

**கோடை விற்பனையை குறி வைக்கும் பச்சை திராட்சை**

பதிவு செய்த நாள் : மே 01,2011,01:24 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கோடை கால விற்பனையை குறி வைத்து பச்சை திராட்சை பழம் அறுவடைக்கு தயாராகி வருகிறது. உற்பத்தி அதிகரித்து இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் பழப்பயிர் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தோட்ட பயிர்களில், கடந்த காலங்களில் பச்சை ரக திராட்சை மற்றும் பன்னீர் திராட்சை பழம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டது. திராட்சை பழங்கள் ஒயின், மது பானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு இங்கிருந்து அதிக அளவில் அனுப்பி வைக்கப்பட்டது. இதனால், ஐந்து ஆண்டுக்கு முன் விவசாயிகள் திராட்சை சாகுபடிக்கு அதிக ஆர்வம் காட்டி வந்தனர். திராட்சை கொடியை பொறுத்த வரையில் முறையான பராமரிப்பு, சரியான நீர் நிர்வாகம் இருந்தால் மட்டுமே திராட்சையில் அதிக வருவாய் பெற முடியும்.

மது ரகங்கள் தயாரிக்க தற்போது, பெங்களூரு மற்றும் ஓசூர் பகுதியில் இருந்து அதிக அளவில் திராட்சை கொள்முதல் செய்யப்படுவதால், கடந்த காலங்கள் போல் வெளி மாநில விற்பனை சரிவடைந்துள்ளது. இதனால், உள்ளூர் விற்பனையை குறி வைத்து தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, பென்னாகரம், பாலகோடு, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் திராட்சை ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

திராட்சை சாகுபடியை பொறுத்த வரையில் ஆண்டு தோறும் இரு பருவங்களில் அறுவடை கிடைக்கும். மார்ச் முதல் மே வரையில் கோடை சீசனிலும், நவம்பர் முதல் டிசம்பர் வரையில் ஒரு பருவத்திலும் திராட்சை அறுவடை கிடைக்கும்.

கோடை கால சீசனான மார்ச் முதல் மே வரையான திராட்சை அறுவடைக்கு, சந்தையில் நல்ல வரவேற்பு கிடைக்கும். தற்போது, பச்சை ரக திராட்சை அறுவடை பணிகள் மாவட்டம் முழுவதும் நடந்து வருகிறது. பொதுமக்கள் பொதுவாக சீட்லெஸ் திராட்சைகளை அதிகம் வாங்கி சாப்பிட துவங்கியிருந்தாலும், இந்த ரகங்கள் மஹாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது.

கோடை காலங்களில் இதன் விற்பனை அதிகம் இருந்தாலும் விலை கிலோ, 60 ரூபாய் முதல், 80 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அதே நேரம் அதிக நீர் சத்தும், புளி மற்றும்

இனிப்பு சுவை நிறைந்த நாட்டு ரக பச்சை மற்றும் கறுப்பு பன்னீர் ரக திராட்சைகள் கிராம பகுதி மக்கள் அதிகம் வாங்கி சாப்பிடுவதால், இந்த ரக திராட்சைகள் ஜூஸ் தயாரிக்க அதிகம் பயன்படுத்தப்படுவதாலும், கோடை காலங்களில் இந்த ரகங்களுக்கு சந்தையில் வரவேற்பு கூடும். தர்மபுரி மாவட்டத்தில் தற்போது அறுவடை பணிகள் தீவிரம் அடைந்திருப்பதோடு, கடந்தாண்டில் ஆந்திரா நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட திராட்சைகள் தற்போது, நோய் தாக்கத்தில் இருந்து மீண்டு நல்ல உற்பத்தியை விவசாயிகளுக்கு கொடுப்பதால், திராட்சை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பச்சை திராட்சை தற்போது, சந்தையிடல் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் சந்தைகள் கூடும் தர்மபுரி, நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், கடத்தூர், அரூர் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் சரக்கு ஆட்டோவில் திராட்சை பழங்களை எடுத்து சென்று நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர். தோட்டங்கள் முன்பும் அதிக அளவில் திராட்சைகளை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர். கொளுத்தும் வெயில் காரணமாக வரும் நாட்களிலும் பச்சை திராட்சைக்கு சந்தையில் வரவேற்பு இருக்கும் என்பதால், விவசாயிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.